<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No.90/2017**</u>

<u>**வழக்கு சாட்சி PW-6**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பண்டிட் மோதிலால் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of March 14th , 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

நான் பீடிக்கடையில் வேலை செய்து வருகிறேன். நான் பொதுவாக வேலைக்கு சென்றால் வீட்டிற்கு வருவதற்கு மாலை 06.00 மணியாகும். பீடிக்கடை வல்லம், சி.எஸ்.ஐ சர்ச்சிலிருந்து 200 மீட்டர் கீழ்புறம் உள்ளது. நான் வேலைக்கு சென்று விட்டால் 06.00 மணி வரை வேறு எங்கும் செல்வது வழக்கமில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட ஸ்டீபன்ராஜ் எனது தம்பியின் மகன். நான் மாலை 04.30 மணியளவில் வல்லம், சிலுவைமுக்கு பகுதியில் நின்றதாகவும், அங்கு 1ம் எதிரியை போலீசார் கைது செய்ததாகவும், அவரை கைது செய்யும் போது நான் உடன் இருந்ததாகவும், அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் முதல் விசாரணையில் கூறியுள்ளது பொய் என்றால்

சரியல்ல. காயம்பட்ட நபர் எனது உறவினர் என்பதினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.